**களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (1) - 2023**

களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (1) இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆம் திகதிய எஸ்எல்-பி 117 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அமுலாக்கல் முகவராகவுள்ளது. களு கங்கை நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்கல் மற்றும் நீர் விநியோக வலையமைப்புக்களை மறுசீரமைத்தல் ஊடாக மேற்கு மாகாணத்தின் தென் பகுதிக்கு பாதுகாப்பான நீரினை வழங்கி நீர் விநியோக வினைத்திறனை அதிகரித்தல், அதன் ஊடாக மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 55,338 மில்லியனிற்கு சமனான யப்பான் யென் 39,067 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 45,056 மில்லியனிற்கு சமனான யப்பான் யென் 31,810 மில்லியன் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 திசெம்பரில் ஆரம்பித்திருந்ததுடன் 2025 ஏப்ரல் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| இல. | செயற்திட்டக் கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | பொதி 1,2,3,4,5 முறையே உள்ளீர்க்கும் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல், பரிமாற்ற பிரதானிகள் மற்றும் விநியோக பிரதானிகளை வழங்கி அமைத்தல், தரை நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேற்று நிலையங்களை நிர்மாணித்தல், மில்லனியாவிற்கான இரண்டாம் நிலை விநியோகத்தை | விரிவான வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கான ஆலோசனை சேவை. | 100 | 8 | (i) விரிவான வடிவமைப்பு, வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் கேள்வி ஆவணங்கள் 2019 யூன் அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மீளாய்வாண்டின் இறுதியளவில் கேள்வி செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | JICA 2022 ஏப்ரல் முதல் பணவளிப்புக்களை தற்காலிகமாக நிறுத்தியது, மேலும் PMU அலுவலகமும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இது செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை கடுமையாக பாதித்துள்ளது. | செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கும், நிலுவையில் உள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கும், பயனாளிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | | | | | (ii) நிர்மாணப் பணிகள் 2020 யூன் மாதத்தில் தொடங்கப்பட்டு 2023 செப்தெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்பட | JICA 2022 ஏப்ரல் முதல் பணவளிப்புக்களை தற்காலிகமாக நிறுத்தியது, மேலும் PMU | செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கும், நிலுவையில் உள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கும், |

| | | | |
|---|---|---|---|
| வழங்கி அமைத்தல், விநியோக ஊட்டி பிரதானிகள் மற்றும் இரண்டாம் நிலை பிரதானிகளின் மிகுதி பகுதியை வழங்கி அமைத்தல், DMA உபகரணங்களை வழங்கி நிறுவுதல். | வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதியிலும் அனைத்து நிர்மாணங்களும் நிர்மாணத்திற்கு முந்தைய கட்டத்தில் இருந்தன. | அலுவலகமும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இது செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை கடுமையாக பாதித்துள்ளது. | பயனாளிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | (iii) நிர்மாணப் பணிகள் 2020 யூன் மாதத்தில் தொடங்கப்பட்டு 2023 செப்தெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், அந்த பொதிகள் அனைத்தும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்திற்கு முந்தைய காலத்தில் உள்ளன. | நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக JICA 2022 ஏப்ரலில் பணவளிப்புக்களை தற்காலிகமாக நிறுத்தியது, இதன் விளைவாக ஆலோசனை ஒப்பந்தமும் PMU அலுவலகமும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. | செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கும், நிலுவையில் உள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கும், பயனாளிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் இச் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நான்கு ஆலோசனை கம்பனிகளுக்கு ஜப்பானிய யென் 558 மில்லியன் மற்றும் ரூபா 773 மில்லியனிற்கு 2020 சனவரி 30 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2025 யூன் 19 அளவில் 65 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 65 ஒப்பந்த காலத்தில் 36 மாதங்கள் கடந்திருந்தன, பௌதீக செயலாற்றல் கிட்டத்தட்ட 8 சதவீதமாக குறைந்த அளவில் இருந்தது. | நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக JICA 2022 ஏப்ரலில் பணவளிப்புக்களை தற்காலிகமாக நிறுத்தியது, இதன் விளைவாக ஆலோசனை ஒப்பந்தமும் PMU அலுவலகமும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. | செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கும், நிலுவையில் உள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கும், பயனாளிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூர் ஆலோசகருக்கு 2020 திசெம்பர் 31 இல் ரூபா 84 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது, மேலும் நிலுவையாக உள்ள ரூபா 50 மில்லியன் முற்பணத் தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒப்பந்ததாரரிடம் இருந்தது. ஒப்பந்ததாரருக்கு ஒரே நாளில் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களின் பெறுமதி ரூபா 282 மில்லியனாக இருந்தது. | ஆலோசனை ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கொடுப்பனவுகளைக் கோருவதற்கு ஒப்பந்ததாரருக்கு உரிமை உண்டு. ஒப்பந்ததாரரால் தாமதக் கொடுப்பனவுகள் கோரப்பட்டிருந்ததால் முற்பணக் கொடுப்பனவுகளின் இழப்பை பகுப்பாய்வு செய்து, PMU இடம் குறித்த இழப்பு தொகைக்கு உரிமை கோரப்படும். | இழப்புக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |